இலஞ்சம் தவிர் நெஞ்சம் நிமிர்

களம் -20 வெற்றி -08

# நேர்மை நெறி

ஆகஸ்டு 2022

(ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்)

(Reg.No.349/2001)

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப்பெரிது

(NERMAI NERI)

Rs.10

## லஞ்சம் உயர வரிகளும் உயரும்




## ஊழல் நம் நாட்டின் சாபம்

PUBLISHED BY

ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை

பதிவு மற்றும் செயல் அலுவலகம்: 155, “நம்பகம்”,
கொன்னூர் நெடுஞ்சாலை, அன்பகம், சென்னை-600023
Cell:8778312823
e-mail:acmchennai2001@yahoo.co.in
website:anticorruptionchennai.com

# தலைவர் மடல்

அன்பார்ந்த உறுப்பினர் சகோதர சகோதரிகளே! வணக்கம். இம்மடல் மூலம் தங்களுடன் தொடர்பு கொள்வதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். தங்கள் அரிதான சேவை இந்த நாட்டை பீடித்துள்ள ஊழலை ஒழிக்க தேவையாதலால் உறுப்பினர்கள் தங்கள் நலம் காக்க, கோவிட்-19 பாதுகாப்பு நெறிமுறைகளை தவறாமல் முறையாக கடைபிடிக்க அன்புடன் வேண்டுகிறேன்.

சென்ற பொதுக்குழுவில், எம்மீது நம்பிக்கை வைத்து மீண்டும் தலைவராகப் போட்டியின்றி தேர்ந்தெடுத்தமைக்கு அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் யாம் இயக்க செயற்குழுவிலும் இருந்து கொண்டு இயக்கம் சார்பாக நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கு நடத்துவதில் சில சட்ட சிக்கல் வருவதால், தலைவர் பதவியை ராஜினாமா செய்துளோம். திரு.எம்.மனுராஜ், இயக்க ஆயுள் உறுப்பினர் அவர்கள் செயற்குழுவால் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவர் எம்மை விடவும் சிறப்பாக செயல்படுவார் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. அவரது தலைமையில் இயக்கம் இன்னும் சிறப்பாக வெற்றி நடைபோடும் என்பதில் சிறு சந்தேகமும் இல்லை. உண்மையில், யாம் இயக்கத் தலைமை பதவியின் பணிகளை செய்ய இயலாமல், முள் மேல் அமர்ந்து இருப்பது போலவே இருந்து வந்தேன். அந்த குற்ற உணர்வில் இருந்து விடுபடுகிறேன். இயக்கத்தின் தலைவர், இயக்க கொள்கைகளை இன்னும் சிறப்பாக மக்களிடம் கொண்டு சென்று, இயக்கத்தில் 50 வயதுக்கும் குறைவான உறுப்பினர்களை சேர்த்து அவர்கள் கையில் பொறுப்பை ஒப்படைக்க ஆவண செய்திருக்க வேண்டும். ஆனால், இதில் எம்மால் ஒரு சிறு முன்னேற்றமும் காட்ட இயவில்லை. இதற்காக உங்கள் அனைவரிடமும் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறிருக்க, யாம் பதவியில் தொடர்ந்தமைக்கு காரணம், மேற்குறிப்பிட்ட குறிக்கோளோடு கூடிய ஒருவர் முன்வராதலால் தான் யாம் இயக்கம் சிதைந்து விடாமல் இருக்கவே பதவியில் தொடந்தோம். இயக்கம் துவங்கக் காரணமானவன் என்ற முறையில், இயக்கம் எழுச்சியாக இல்லாவிடினும் வீழ்ச்சியடையாமல் இருக்க வேண்டும் என்பதற்காக குற்ற உணர்வுடன் தலைமை பதவியில் தொடர்ந்தோம்.

இனி, புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தலைவர், பல்நோக்கு சிந்தனையாளர், தமக்கு யாது நேரினும் ஊழலை எதிர்க்க உறுதி பூண்டவர். எனவே, இயக்கம் ஒரு புது வேகத்துடன் இனி செயல்படும் என்று உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். இயக்கத்தலைவர் பதவியில் இல்லாவிடினும், எமது இயக்கப்பணி இதுகாறும் இருந்தவாறே தொடரும். உறுப்பினர் என்ற முறையிலும், இயக்க சட்ட ஆலோசகர் என்ற எமது பணியை செவ்வனே செய்வேன் என உறுதி கூறுகிறேன். எமது, 17 ஆண்டுகள் வழக்கறிஞர் பணியில், கருப்பு பணம் பெற்றதில்லை, ஒருவருக்கும் ஒரு ரூபாய் லஞ்சம் கொடுத்ததில்லை, காசுக்காக குற்றவாளிகளை காப்பாற்றவோ அல்லது தவறான வழக்குக்களுக்காகவோ யாம் ஆஜரானதும் இல்லை. அந்த வகையில், இயக்க உறுப்பினராக யாம் எடுதுக்கோண்ட உறுதிமொழியை முழுமையாக கடைபிடித்து வந்துள்ளோம் என்பதை வெளிப்படையாக தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு எந்த இயக்க உறுப்பினரது தனிப்பட்ட வழக்குகளையும் எடுக்காமல் தொடர்ந்து மறுத்து வந்துள்ளோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். இதை யாம் வெளிப்படையாக கூறக்காரணம், “நேர்மையாக இருப்பின் பிச்சை தான் எடுக்க வேண்டும், பொய் சொல்லாமல் வழக்குகள் நடத்த இயலாது” என்று நிலவி வரும் கூற்று பொய் என்று நம் இயக்க உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்கே. என்னைத் தேடிக்கொண்டு வழக்குகள் வரத்தான் செய்கின்றன. நேர்மையான வருமானமும் வரத்தான் செய்கிறது.

எனவே, நேர்மையாக இருப்பின் பிச்சதான் எடுக்க வேண்டும், பொய் சொல்லாமல் வழக்கில் ஜெயிக்க முடியாது என்ற திருடர்களின் கூற்றை புறந்தள்ளி நேர்மையை மக்கள் மத்தியில் ஆழகமாக விதைக்க வேண்டுகிறோம்.

இயக்கம் ஆரம்பித்திட்டு 20 ஆண்டுகள் முடியும் தருவாயிலும், இயக்க உறுப்பினர்கள் இயக்கத்தின் நோக்கத்தை சரியாக புரிந்து கொள்ளவில்லை என்பது எமக்கு மன வேதனை அளிக்கிறது. இதில், இதுகாறும் இயக்கதலைமை தோற்றுவிட்டது என்பதும் உண்மையே. இதை மாற்றி ஒவ்வொரு உறுப்பினரும், தத்தமது சுற்றுவட்டாரத்தில் நடக்கும் ஊழல்களை எதிர்த்து ஒழித்துக்கட்ட முன்வர வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!!

அன்புடன்,

ந.சுப்ரமணியன்

---

**<u>ஊழல் எதிர்ப்பு இயக்க பொதுகுழு கூட்டம் 2022 (நாள் (04-09-2022)</u>**
**<u>ஞாயிற்று கிழமை காலை 11 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை</u>**
**<u>இடம்: 155 , கொன்னூர் ஹை ரோடு , அயனாவரம்.சென்னை-23</u>**

10-07-2022 அன்று நடந்த பொதுக்குழுவில், இயக்கத் துணை விதிகளின் படி குறைந்தபட்ச உறுப்பினர்கள் கலந்து கொள்ளாததால், மீண்டும் பொதுக்குழுக் கூட்டம் 04-09-202, ஞாயிற்றுக்கிழமை யன்று நமது தலைமை அலுவலகத்தில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலில் நடைபெற உள்ளது.

**<u>நிகழ்ச்சி நிரல்</u>**

- 11-00 **மணி தமிழ் தாய் வாழ்த்து**
- 11-05 **வரவேற்புரை**
- 11-15 **தலைவர் உரை**
- 11.25 **ஆண்டு அறிக்கை பொது செயலர் சமர்ப்பித்தல்**
- 11.35 **ஆண்டு நிதி அறிக்கை நிதி செயலர் சமர்ப்பித்தல்**
- 11-45 **ஊழல் எதிர்ப்பு வழிமுறைகள்/ செயல்முறைகள் பற்றி உரையாடல்**
- 13-00 **மதிய உணவு இடைவேளை**
- 14-00 **கூட்ட தீர்மானங்கள்**
- 14-15 **ஊழல் ஒழிப்பு உறுதிமொழி**
- 14-25 **நன்றி உரை**
- 15-00 **நாட்டுப்பண்**

**மாவட்டம் மற்றும் கிளைச் நிர்வாகிகள் மற்றும் அனைத்து இயக்க உறுப்பினர்களும் திரளாக வருகை தந்து கூட்டத்தை சிறப்பிக்க அன்போடு அழைக்கின்றோம்.**

**பொதுச்செயலர்**

# சிலைகள் மற்றும் நினைவு மண்டபங்கள் | வீணாகும் மக்கள் வரிப்பணம்

வே. கார்த்திகை ராஜன்
பொதுச் செயலாளர்

**சிலை & நினைவு மண்டபங்கள்**

சிலை அமைப்பதும் நினைவு மண்டபங்கள் அமைப்பதும் அரசியலாகி விட்டது. தமிழக அரசு சமீபமாக சிலை மற்றும் நினைவு மண்டபங்கள் அமைக்கும் பல உத்தரவுகளை வெளியிட்டு வருகிறது

ஒவ்வொரு கட்சி ஆட்சிக்கு வரும் போதும் அவர் கட்சி சார்ந்த கொள்கையுடைய தலைவர்களுக்கு இவற்றை அமைப்பது வழக்கமாகி விட்டது. இதோடு புதிய/பழைய திட்டங்களுக்கு, கட்டிடங்களுக்கு, நிறுவனங்களுக்கு அரசியல் தலைவர்கள் பெயர்களை வைத்து மக்கள் வரிப்பணத்தை வீணடிப்பது

**கலைஞர் நினைவு மண்டபம்**

எம்ஜிஆர், ஜெயலலிதா நினைவு இடங்களுக்குப் போட்டியாக கலைஞர் மண்டபம் வரும் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. நிதி நெருக்கடி இருப்பதாக அறிவித்து விட்டுத் தற்போது ₹39 கோடியில் நினைவு மண்டபம் கட்டுகிறார்கள். இவர்கள் கொடுத்த மாதிரி வரைபடத்தில் ஒரே ஒரு பேனா தவிர வேறு எந்தப் பெரிய கட்டிடமும் இருப்பதாகத் தெரியவில்லை. இதற்கு ₹39 கோடி தண்ட செலவு.

கருணாநிதி பயன்படுத்திய பேனாவின் மாதிரி வடிவத்தை பிரமாண்ட சிலையாக சென்னை மெரினா கடலுக்கு நடுவே அமைக்க தமிழ்நாடு அரசு திட்டமிட்டிருக்கிறது. இதற்காக மேற்கொண்டு சுமார் 81 கோடி ரூபாய் செலவில் கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலையை விடப் பெரியதாக 134 அடி உயரத்தில் பேனா சிலை அமைக்கப்படவிருப்பதாக தகவல் வெளியாகியிருக்கிறது. மேலும், கடலில் அமையவிருக்கும் இந்த பேனா சிலைக்குச் செல்ல கரை மீது 290 மீட்டரும், கடலின் மீது 360 மீட்டரும் என மொத்தம் 650 மீட்டர் தொலைவில், கடல்பரப்பிலிருந்து 6 மீட்டர் உயரத்தில் இரும்பாலான கண்ணாடிப் பாலம் ஒன்றை ஏற்படுத்தப் போவதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஏற்கெனவே, கருணாநிதிக்கு மெரினா கடற்கரையில் சுமார் 2.23 ஏக்கர் பரப்பளவில் ரூ.39 கோடியில் அரசு சார்பில் நினைவிடம் கட்டப்பட்டு வரும் நிலையில், மேலும் இரண்டு மடங்கு செலவில் புதியதாக கடலில் பேனா சிலை வைப்பதற்கு பல்வேறு தரப்பினர் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றனர்.

**தமிழ்நாட்டின் சிலைகள் கலாச்சாரம்**

இதன் பிறகு அண்ணாசாலையில் கலைஞர் சிலை வைக்கப்படப் போவதாக அறிவிப்பு! இதை இதே நினைவு மண்டபத்திலேயே வைக்கலாமே! இதை போக்குவரத்து நெரிசல் உள்ள அண்ணாசாலையில் ஏன் வைக்க வேண்டும்? பிறந்தநாள், நினைவுநாள், மற்ற விழாக்கள் என்று இங்கே கூட்டத்தை கூட்டி போக்குவரத்து நெரிசல் ஏற்படுத்துவார்கள்.

ஏற்கனேவே, அண்ணா, எம்ஜிஆர், ஜெ சிலைகளுக்கு இந்த பிரச்சனைகள் உள்ளன. தற்போது கூடுதலாக கலைஞரும் சங்கத்தில் இணைந்து விட்டார். 'ஜெ' சிலைக்கு ஏணியை எடுத்து விட்டார்கள் என்று புகார் கொடுக்கும் அரசியல்வாதிகள் எதற்குச் சிலையை வைக்கணும்? பின்னர் இப்படி புலம்பனும்?

இவர்கள் அனைவருக்கும் மெரினாவில் பல கோடி செலவில் நினைவுமண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளது. அப்படி இருக்கையில் சிலைகளை அங்கேயே வைக்கலாமே! ஏன் சாலை, தெருவில் வைத்துப் பொதுமக்களையும், போக்குவரத்தையும் தொல்லை செய்ய வேண்டும்? தலைவர்கள் மீது அன்பு கொண்டுள்ளவர்கள் அவர்களது கட்சி

அலுவலகத்தில் வைத்துக்கொண்டு தினமும் வணங்கலாமே! யார் குறை கூறப்போகிறார்கள்?!

**தொடரும் சிலை & நினைவு மண்டபங்கள்**

அப்துல் கலாமுக்கு சென்னைப் பல்கலை கழகத்தில் சிலை என்று அறிவிப்பு! கலாமுக்கும் பல கோடி செலவில் நினைவு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பல கோடி செலவில் நினைவு மண்டபம் இருக்கையில், இங்கே ஏன் தேவைப்படுகிறது?

பெரியாருக்கு ₹100 கோடியில் திருச்சியில் சிலை (திராவிடர் கழகம் அமைப்பதாகக் கூறப்படுகிறது). இவையல்லாமல் இன்னும் பலருக்கு சிலை, நினைவு மண்டபங்கள் அமைக்க சமீபத்தில் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

**மக்களின் வரிப்பணத்தில் அரசியல் கட்சிகள் தங்களுக்கு விளம்பரம் தேடிக்கொண்டுள்ளன. பல நூறு கோடி மக்கள் வரிப்பணம் இதற்காக கூச்சமே இல்லாமல் செலவிடப்பட்டுள்ளன**

இது போதாது என்று குறிப்பிட்ட தலைவரைப் பிடிக்காதவர் செருப்பு மாலை போட்டால், அதற்குக் காவல்துறை பாதுகாப்பு! அரசுத் திட்டங்களுக்குப் பணம் இல்லையென்று கூறுவது, பின்னர் இது போல வெட்டியாக செலவு செய்து. மக்களின் வரிப்பணத்தை வீணடிக்கும் இந்நிலையை பார்க்கும் போது ஏற்படும் எரிச்சல் கொஞ்ச நஞ்சமல்ல.

இவை அனைத்துமே அரசியல் கட்சிகள் பொதுமக்கள் பணத்தைக் கொண்டு செலவளிக்கும் கட்சி விளம்பரங்களே! பொதுமக்கள் இதை தட்டிக்கேட்க வேண்டும்.

**கண்டு கொள்ளாத நீதிமன்றங்கள்**

மக்கள் வரிப்பணத்தை வீணடிக்கும் சிலை, நினைவு மண்டபங்களுக்கு நீதிமன்றங்களும் தடை போடாமல் வேடிக்கை பார்ப்பது மேற்கூறியதை விட கோபத்தை ஏற்படுத்துகிறது. அரசியல் கட்சிகள் பொது இடங்களில் சிலை, நினைவு மண்டபம் அமைப்பதற்கு தடை வேண்டும். இதை நீதிமன்றமே முன்னெடுத்து ஏன் தடைவிதிக்கக் கூடாது?!

சிலை வைக்க விருப்பப்படுகிறவர்கள் அவர்கள் சொந்த செலவில், அவர்கள் கட்சி அலுவலகத்திலேயே வைத்துக்கொள்ளட்டும். இதை யாரும் எதிர்க்க மாட்டார்கள். இல்லையென்றால், ஒரு பெரிய நினைவு மண்டபத்தை அமைத்து அதில் வரிசையாக ஒவ்வொருவருவருக்கும் சிலை வைத்து விடலாம்.

**அமரர் நவீன சிங்கப்பூர் தந்தை திரு 'லீ குவான் யூ' கூறியது..**

**'நான் இறந்த பிறகு எனக்குச் சிலை வைக்கக் கூடாது. நான் வாழ்ந்த வீட்டை நினைவு இல்லம் ஆக்கக் கூடாது. ஒருவரின் புகழ் என்பது அவர் செய்த செயலில், சாதனையில் தான் உள்ளதே தவிர நினைவுச் சின்னங்களில் அல்ல'**

<u>இயக்கத்துக்கு நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன</u>**.**

நன்கொடைகள்**.** வருமான வரிச்சட்டம் பிரிவு **80 (G)** யின் கீழ் விலக்கு(சலுகை) உள்ளது**.** பணத்தை கீழ்க்கண்ட வங்கிக்கு **NEFT** மூலமாக அனுப்பலாம் **.**

**Indian OverSeas Bank, Ayanavaram Branch (IFSC Code: IOBA0000009)**
**Savings A/C No: 000901000041657**

# நீர்வளத்தை சூறையாடுவதற்கா அமைச்சர் பதவி?

***-சாவித்திரி கண்ணன்***

July 21, 2022

ராட்சத மணல் கொள்ளைகள் திமுக ஆட்சி பொறுப்பேற்றதில் இருந்து நடைபெற்றுக் கொண்டுள்ளன! நீர்வளத் துறை அமைச்சர் பொறுப்புக்கு முற்றிலும் பொருந்தாதவராக நீர் வற்றும் வாய்ப்புகளை நாளும், பொழுதும் ஆராய்ந்து, மணல் கொள்ளையில் மலைக்க வைக்கும் சாதனை நிகழ்த்துகிறார் துரைமுருகன்! திமுக ஆட்சிக்கு வந்ததும் கடந்த ஆண்டு அக்டோபரில் புதிதாக 15 மணல்குவாரிகளை ஏற்படுத்தினார் துரைமுருகன்.

தமிழ்நாட்டில் தற்போது மொத்தம் 41 மணல் குவாரிகள் செயல்படுகின்றன! 21 மணல் குவாரிகள் லாரிகள் மூலமாகவும், 30 மணல் குவாரிகள் மாட்டு வண்டி மூலமாகவும் மணல் அள்ளப்பட்டு வருகின்றன! இவற்றில் நாள்தோறும் பல்லாயிரம் லாரி லோடுகளும், பல்லாயிரம் மாட்டு வண்டி லோடுகளும் அள்ளப்பட்டு வருகின்றன! தமிழகத்தில் ஓராண்டுக்கு சுமார் 60 லட்சம் லாரி மற்றும் மாட்டு வண்டி லோடு மணல் அள்ளப்படுகின்றன! இதனால், ஆற்றுப் படுகைகள் 80 அடி ஆழம் வரை தோண்டப்பட்டு பள்ளத்தாக்குகளாக காட்சி அளிக்கின்றன!

ஆனால், இந்த அநீதி போதாது என்று தொடையைத் தட்டிக் கொண்டு களம் கண்டு "புதிதாக மணல் அள்ளப் போகிறோம்" என்று கூறி கடலூர், திருச்சி, வேலூர், அரியலூர், கரூர் ஆகிய மாவட்டங்களில் காவிரி, கொள்ளிடம், பாலாறு, வெள்ளாறு ஆகிய ஆறுகளில் புதிதாக 9 மணல் குவாரிகளுக்கு திட்டமிட்டு உள்ளார். மேலும், சுற்றுச் சூழல் பாதுகாப்பை கருத்தில் கொண்டு ஏற்கெனவே மாட்டு வண்டிகளில் மட்டும் மனித சக்தியைக் கொண்டு மணல் அள்ள அனுமதிக்கப்பட்ட 30 மணல் குவாரிகளில் எந்திரங்களைப் பயன்படுத்தி மணல் அள்ளவும் அனுமதி கோரி தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடம் நீர்வளத்துறை சார்பில் அமைச்சர் துரைமுருகன் சமீப காலமாக விண்ணப்பித்து நிர்பந்தித்து வந்தார்.






- அரியலூர் மாவட்டம் செந்துறை வட்டத்தில் வெள்ளாறு பாய்கிறது! இங்கே ஒரு கீ.மீக்கு ஒரு மணல் குவாரி என்ற வகையில் 8 இடங்களில் எந்திரம் மூலம் மணல் அள்ள அரசு திட்டமிட்டிருக்கிறது. இதே போல நாமக்கல் மாவட்டத்தின் மோகனூர் தாலுகாவில் காவேரி ஆற்றில் 3 இடங்களிலும்,
- கரூர் மாவட்டத்தில் காவேரி ஆறு பாயும் மண்மங்கலம் தாலுகாவில் 5 மற்றும் கிருஷ்ணராயபுரம் தாலுகாவில் 2 இடங்களிலும்,
- தஞ்சாவூர் மாவட்டத்தில் கொள்ளிடம் ஆறு பாயும் கும்பகோணம் தாலுகாவில் 3 மற்றும் பாபநாசம் தாலுகாவில் 2 இடங்களிலும்,

- புதுக்கோட்டை மாவட்டம் வெள்ளாறு பாயக் கூடிய அறந்தாங்கி தாலுகாவில் 2 இடங்களிலும்,
- தூத்துக்குடி மாவட்டத்தில் வைப்பாறு பாயக்கூடிய விளாத்திக்குளம் தாலுகாவில் 1 இடத்திலும்,
- ராமநாதபுரம் மாவட்டத்தில் பாம்பார் பாயக்கூடிய திருவாடானை தாலுகாவில் 2 இடங்களிலும், கோட்டக்கரை ஆறு பாயக்கூடிய ஆர்.எஸ்.மங்கலம் தாலுகாவில் 2 இடங்களில் உள்ள மணல் குவாரிகளுக்குமாக மொத்தம் 30 குவாரிகளில் மணல் அள்ளும் முறையில் திருத்தம் கோரி, சுற்றுச் சூழல் துறைக்கு நிர்பந்தம் கொடுத்துள்ளார் துரைமுருகன்.

உரிய ஆய்வுகள், வழிகாட்டுதல்கள், கண்காணிப்புகள் இன்றி ஆற்று மணல் குவாரிகள் அமைப்பதால் ஆற்றுப்படுகை அழிந்து நிலத்தடியில் நீர் சேகரமாவது தடைபடும். ஆற்றின் கரைகள் உடைக்கப்படுவதோடு, தடுப்பணைகளின் மணல் அரிப்பு ஏற்பட்டு கட்டுமானம் நிலைகுலையும். ஆறுகளின் இயல்பான நீரோட்டம் தடைபடுவதோடு ஆற்றங்கரை உயிர்ப்பன்மையத்தின் சமநிலை கெடும் நிலை ஏற்படும்.ஆகவே கண்டிப்பாக சுற்றுச் சூழல் அமைச்சர் மெய்யநாதன் இதை அனுமதிக்கக் கூடாது" எனக் கூறியுள்ளது.

ஆனால், முதலமைச்சருக்கு அடுத்த நிலையில் சகல அதிகாரத்துடன் வலம் வரும் துரைமுருகனுக்கு செக் வைக்கும் தைரியம் மெய்யநாதனுக்கு இருக்குமா? என்பது கேள்விக்குறியே! மணல் அள்ளுவதை எதிர்த்து மக்களும், விவசாயிகளும் ஏராளமான போராட்டங்களை நடத்தி சோர்ந்துவிட்டனர். காவிரி ஆற்றுப்படுகையில் கதறக் கதற மண் அள்ளப்பட்டு வருவது குறித்து காவிரி ஆறு பாதுகாப்பு இயக்கத்தினர் தொடர்ந்து போராடி வருகின்றனர். சமீபத்தில் அவர்கள் கரூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளித்த மனுவில் கூறியிருப்பதாவது:

"கரூர் மாவட்டத்தில், மண்மங்கலம் வட்டம், நெரூர் வடக்கு (மல்லம்பாளையம்) 4.90 ஹெக்டேர் பரப்பளவில் புதிய மணல்குவாரி அமைக்க, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் அனுமதி அளித்துள்ளது. இந்த இடத்துக்கு அருகே, 500 மீட்டர் துாரத்தில் ஏற்கனவே மணல் குவாரிகள் செயல்பட்டன.



**கொள்ளிடம் ஆற்றில் மணல் கொள்ளைக்கு எதிராக மக்கள்**

மேலும், தேசிய பசுமை தீர்ப்பாய உத்தரவுகளை புறந்தள்ளியும், ஏற்கனவே மணல் குவாரிகள் இயங்கியதை மறைத்தும், தற்போது குவாரி அனுமதி கேட்கப்பட்டுள்ளது. இதன்படி, புதிய மணல் குவாரிகளுக்கு கருத்து கேட்பு கூட்டம் நடத்தாமலேயே, பொய்யான ஆவணங்கள் மூலம் சுற்றுச்சூழல் அனுமதி பெறப்பட்டுள்ளதாக தெரிகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உள்ளிட்ட அரசு துறைகளின் குடிநீர் திட்டங்கள் அல்லது மேற்கண்ட எந்த அரசு பயன்பாட்டு இடங்களுக்கும், அதற்கு ஒட்டிய, 500 மீட்டர் சுற்றளவிற்கு எவ்வித மணல் எடுப்பு பணியும் அமையக் கூடாது" என, தெளிவாக

கூறப்பட்டுள்ளது. ஆனால், புதிய மணல் குவாரிக்கு அருகிலேயே நீர் எடுக்கும் நிலையங்கள் இருப்பதை மறைத்து அனுமதி பெறப்பட்டுள்ளது. இதனை தொடங்க மாவட்ட நிர்வாகம் அனுமதிக்க கூடாது என அந்த மனுவில் கூறப்பட்டு உள்ளது.

ஏற்கனவே, கரூர் மாவட்டத்தில் காவிரி ஆற்றுப்படுகைகளில் 8 மணல் குவாரிகள் செயல்பட்டு வந்தன. இந்த மணல் குவாரிகளால் நீர்வள ஆதாரங்கள் பாதிக்கப்படுவதாகவும், விவசாயம் பாதிக்கப்படுவதாகவும், எதிர்காலத்தில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்தது. இது தொடர்பாக மதுரை ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. இதையடுத்து மணல் குவாரிகளை ஆய்வு செய்ய கோர்ட்டு குழுவை அமைத்து உத்தரவிட்டது. அந்த குழுவின் அறிக்கைபடி, "கரூர், திருச்சி, நாமக்கல் மாவட்டங்களில் செயல்பட்டு வரும் அனைத்து மணல் குவாரிகளையும் மூட வேண்டும்" என்று உயர் நீதிமன்றம் நவம்பர் 29, 2017ல் உத்தரவிட்டது.

இதைத் தொடர்ந்து அதிமுக எடப்பாடி பழனிச்சாமி அரசின் பொதுப்பணித்துறை சார்பில் கோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில் மணல் குவாரிகளில் முறைகேடு நடக்காதவாறு சி.சி.டி.வி. கேமரா பொருத்தப்படும், மணல் அள்ளப்படும் இடத்தில் இருந்து சேமிப்பு கிடங்கு வரை செல்லும் மணல் லாரிகளில் ஜி.பி.எஸ். கருவி பொருத்தப்படும், குறிப்பிட்ட அளவுக்கு மட்டுமே மணல் அள்ளப்படும், ஒரு லாரிக்கு 2 அல்லது 3 யூனிட் மணல் மட்டுமே விற்பனை செய்யப்படும், ஆன்லைனில் மட்டும் மணல் புக் செய்து விற்பனை செய்யப்படும்" என்ற உத்தரவாதங்கள் அளிக்கப்பட்டன.

இதை ஏற்றுக் கொண்ட மதுரை ஐகோர்ட்டு 2018 ஆம் ஆண்டு பிப்ரவரி 16-ந்தேதி மாயனூர் காவிரி ஆற்றில் மணல் குவாரி செயல்பட அனுமதி அளித்தது. இதைத் தொடர்ந்து மாயனூர் காவிரி ஆற்றில் மணல் குவாரி செயல்பட தொடங்கியது. இதுபோல் பல்வேறு இடங்களில் கோர்ட்டு அனுமதி பெற்று மணல் குவாரிகள் செயல்படத் தொடங்கின. இதற்கிடையே கட்டுமானப் பணிகளுக்கு மணல் தட்டுப்பாடு நிலவுவதாக சொல்லி, புதிதாக 27 மணல் குவாரிகளை தொடங்க அதிமுக அரசு முடிவு செய்தது. அதன்படி தஞ்சாவூர், நாமக்கல், திருச்சி, சிவகங்கை, கடலூர், விழுப்புரம், திருவள்ளூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் இந்த 27 குவாரிகளும் திறக்கப்பட்டன! அவை யாவும் ஆற்றோரங்களை மேன்மேலும் பள்ளத்தாக்குகளாக மாற்றின.

இவ்வாறு, அதிமுக, திமுக என மாறி, மாறி ஆட்சிக்கு வந்து, மணல் அள்ளி தமிழகத்தை பாலைவனமாக்க சூறையாடுவதில் ஒரே மாதிரி செயல்படுகின்றனர். கேரளாவில் 2006 ஆம் ஆண்டு முதல் மணல் அள்ளத் தடை விதிக்கப்பட்டு, அது எந்த மீறல்களும் இன்றி 16 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்கிறது. தங்கள் தேவைக்கு தமிழ் நாடு அல்லது வெளிநாடுகளில் இருந்து தான் மணலை வாங்குகிறது கேரள அரசாங்கம். தங்கள் மண்ணின் இயற்கை வளம் அழியக் கூடாது என்பதில் அங்குள்ள அனைத்து கட்சிகளுமே ஒருமித்து செயல்படுகின்றன! ஆனால், தமிழ்நாட்டிலோ இயற்கை வளங்களை சுரண்டிக் கொழுப்பதில் தான் கட்சிகள் ஒன்றுபடுகின்றன! கொரோனா காலத்தில் மலேசியாவில் இருந்து 5,20,000 டன்கள் மணல் இறக்குமதி ஆனது. அது யூனிட் ரூ10,000 தான்! ஆனால், தமிழகத்தில் தோண்டி எடுக்கப்படும் மணலோ யூனிட் ரூ12,000 விற்கப்படுகிறது. விலை குறைவாக கிடைக்கும் மணலை இறக்குமதி செய்துவிட்டு போகலாமே! இன்னும் சொல்வதென்றால், விலை அதிகமாக இருந்தாலுமே கூட மணலை கேரளாவை போல இறக்குமதி செய்வதே நல்லது. ஏனெனில், இயற்கை என்பது விலை மதிப்பு இல்லாதது.

**<u>நேர்மையாளர்களின் வாழ்வில் சில சம்பவங்கள்</u>**

## <u>தாமதம் வேண்டாம்!</u>

காந்திஜியின் கடைசி நாட்கள் 'பாத யாத்திரை நாட்கள்' என்று குறிப்பிடப்படுகின்றன. அவர் ஒவ்வொரு நாளும் சரியாக காலை ஏழு மணிக்குத் தொடங்கி மாலை ஆறு மணிக்கு பாதயாத்திரையை முடிப்பது வழக்கம். காந்திஜியுடன் அவரது தொண்டர்கள், பிரார்த்தனைப் பாடல் பாடும் குழுவினர், பொது மக்கள் ஆகியோர் தினமும் பாதயாத்திரையில் கலந்து கொள்வார்கள்

ஒரு சமயம் வழக்கம் போல் காலை ஏழு மணிக்கு பாதயாத்திரைக்குத் தயாராகி விட்டார் காந்திஜி. ஆனால், காந்திஜியின் பொருள்களை எடுத்து வரும் அவரது பேத்தி மனுபென், கிளம்புவதற்கு சற்று தாமதமானது. காந்திஜியை எதிர்பார்த்து வெளியே ஐநூறுக்கும் மேற்பட்ட மக்கள் காத்துக் கொண்டிருந்தினர்.

அதைக்கண்ட காந்திஜி வேகமாக மனுப்பென்னின் அறைக்குள் சென்று, "இதோ பாரம்மா! வெளியே ஐநூறு பேருக்கும் அதிகமான மக்கள் ஐந்து நிமிடமாகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் அனைவரின் ஐந்து நிமிடங்களை நீ திருடிவிட்டாய்!: என்றார்.

தாத்தா! அது வந்து....! " என்று இழுத்தார் மனுபென்.

"இதோ பாரம்மா! மற்றவர் நேரத்தைத் திருட நமக்கு எந்த உரிமையும் இல்லை. நாம் பொது மக்களை விட உயர்ந்தவர்கள்: அதனால், அவர்கள் நமக்காக ஒரு ஐந்து நிமிடம் காத்திருக்கட்டும் என்ற அலட்சியம் உனக்கு வந்து விட்டது. இப்போது நான் உனக்காகக் காத்துக் கொண்டிருக்க முடியாது. நான் யாத்திரைக்குப் புறப்படுகிறேன். நீ என் பின்னால் வா!" என்று கடுமையாகக் கூறிவிட்டு வேகமாக வெளியேறினார் காந்திஜி.

---



## செயற்குழுக் கூட்டம் (30-07-2022)

இன்று (30-7-2022) நமது இயக்கத் துனைத்தலைவர் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் துணைத் தலைவர், பொது செயலாளர், மூன்று செயலாளர்கள் மற்றும் ஒரு பார்வையாளரும் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றபட்டன.

1. இயக்கத்தின் 2022 ஜூன் மற்றும் ஜூலை 2022 மாத வரவு-செலவு அறிக்கை வாசிக்கப்பட்டது. வரவு-செலவு கணக்கு சரியானதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2. சென்ற பொதுக்குழுக் கூட்டம் ஜூலை 10ம் தேதி பாண்டியன் ஹோட்டலில் நடைபெற்றது. அங்கு உறுப்பினர்களின் வருகை மிகவும் (quorum) குறைவாக இருந்ததால், அந்தப் பொதுக்குழுக் கூட்டத்தை மீண்டும் நடத்த 04-09-2022 அன்று ஞாயிற்றுக்கிழமை நடத்த தலைவர் முடிவு எடுத்துள்ளார். இதற்கான அறிவிப்பை பிரகடனப்படுத்துமாறு தீர்மானிக்கப்பட்டது.

3. இயக்கத் தற்பொதைய தலைவர், திரு N. சுப்ரமனியன், தனது தலைவர் பதவியிலிருந்து ராஜினாமா செய்வதாக கடிதம் கொடுத்தார். தலவரின் ராஜினாமா ஒரு மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4. இதனால் காலியான தலைவர் பதவிக்கு திரு V. கார்த்திகை ராஜன் அவர்கள் திரு K.மனுராஜ் **(LM-3)** அவர்களைத் தலைவராக முன் மொழிய, துணைத்தலைவர் திரு V ஐயப்பன் அவர்கள் வழி மொழிந்தார். தொலைபெசி மூலம் திரு மனுராஜிடம் சம்மதம் பெறப்பட்டு, திரு மனுராஜ் அவர்களைத் தலைவராக நியமனம் **(co-opt)** செய்ய ஒரு மனதாக தீர்மானம் நிறைவேறியது

5. காலியாக உள்ள செயலாளர் (மக்கள் தொடர்பு) பதவிக்கு உறுப்பினர் திரு B பாலாஜி அவர்களை நியமிக்கக் கோரி நிதி செயலாளர் திரு A. தணசேகரன் அவர்கள் முன் மொழிய, பதிப்பக செயலாளர் திரு G கோவிந்த சாமி அவர்கள் வழி மொழிய செயற்குழுவில் ஒரு மனதாக தீர்மானம் நிறைவேறியது.

6. திரு N. சுப்ரமனியன் அவர்கள் பதவியில் இருந்து விலகினாலும், அவரை சட்ட ஆலோசகராக **(LEGAL ADVISER)** னமது இயக்கத்துக்கு நியமனம் செய்ய தீர்மானம் நிறைவேறியது. அனைத்து நிர்வாகக் குழுக் கூட்டங்களிலும் அவர் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இறுதியில் பொதுச் செயலாளர் நன்றியுடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

| | |
|---|---|
| V. ஐயப்பன் | V கார்த்திகை ராஜன் |
| துனைத் தலைவர் | பொதுச் செயலாளர் |

**இயக்கத்துடன் தொடர்பு கொள்ள:**

| | | |
|---|---|---|
| | திரு **N** சுப்ரமணியன்**,** தலைவர் | **: 9444274352** |
| | திரு **V** கார்த்திகை ராஜன்**,** பொதுச்செயலாளர் | **: 87783 12823** |
| | திருமதி பாக்யலட்சுமி**,** மேலாளர் | **: 90031 25142** |
| **E- Mail** | **: acmchennai2001@yahoo.co.in** | |
| **Website** | **: anticorruptionchennai.com** | |

# அரசியல்வாதிகளுக்கு ஓய்வூதியம்

அரசியல்வாதிகளுக்கு ஓய்வூதியம் வழங்குவதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இப்போது தலைவர்களின் தலைவர் ஒருவர் உச்சநீதிமன்றத்தில் ஒரு பொதுநல மனுவை தாக்கல் செய்துள்ளார்,

ஒவ்வொரு குடிமகனும் இந்தியாவில் குரல் எழுப்ப வேண்டும். 2018 மேம்பாட்டுச் சட்டம் எம்.பி.க்கள் ஓய்வூதியம் பெறக்கூடாது, ஏனெனில் அரசியல் ஒரு வேலை அல்லது வேலைவாய்ப்பு அல்ல, ஆனால் ஒரு இலவச சேவை. - அரசியல் என்பது பொது பிரதிநிதித்துவச் சட்டத்தின் கீழ் ஒரு தேர்தல், ஓய்வு இல்லை, ஆனால் அவர்கள் மீண்டும் அதே சூழ்நிலையில் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படலாம். (தற்போது அவர்களுக்கு ஓய்வூதியம் கிடைக்கிறது, 5 வருட சேவைக்குப் பிறகு). இதில் இன்னொரு கோளாறு என்னவென்றால், ஒருவர் முதலில் கவுன்சிலராக இருந்து, பின்னர் சட்டமன்ற உறுப்பினராகி, பின்னர் எம்.பி. ஆகிவிட்டால், அவருக்கு ஒன்று அல்ல, மூன்று ஓய்வூதியங்கள் கிடைக்கும்.

இதைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டிய நாட்டின் குடிமக்களுக்கு இது ஒரு பெரிய துரோகம் மத்திய ஊதியக்குழுவுடன், பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பள கொடுப்பனவு திருத்தப்பட்டு வருகிறது .... இதை வருமான வரியின் கீழ் கொண்டு வர வேண்டும். தற்போது, எம்.பி.க்கள் தங்களது சம்பளத்தையும் கொடுப்பனவுகளையும் தன்னிச்சையாக வாக்களிப்பதன் மூலம் தன்னிச்சையாக அதிகரிக்கின்றனர், அந்த நேரத்தில் அனைத்து கட்சிகளும் ஒன்றுபட்டுள்ளன.

எம்.பி.க்களின் சுகாதார பராமரிப்பு முறை நிராகரிக்கப்பட வேண்டும் .. மேலும் இந்தியாவின் பொது சுகாதாரம் போன்ற சுகாதாரப் பாதுகாப்பு மற்ற குடிமக்களைப் போலவே அவர்களைக் கவனித்துக் கொள்ள வேண்டும். தற்போது அவர்களின் சிகிச்சை பெரும்பாலும் வெளிநாடுகளில் செய்யப்படுகிறது. அவர்கள் அதை வெளிநாட்டில் செய்ய வேண்டுமானால், தங்கள் சொந்த செலவில் அவர்கள் அதைப் பெற வேண்டும்.

மின்சாரம், நீர் மற்றும் தொலைபேசி பில் போன்ற அனைத்து சலுகைகளும் முடிவுக்கு வர வேண்டும். (அவர்கள் இதுபோன்ற பல சலுகைகளைப் பெறுவது மட்டுமல்லாமல், அவற்றை தவறாமல் அதிகரிக்கிறார்கள்)

குற்றவாளிகள் தேர்தலில் போட்டியிடுவதைத் தடுக்க வேண்டும், தண்டனையான பதிவுகள், குற்றவியல் குற்றச்சாட்டுகள் மற்றும் உறுதியுடன் சந்தேகத்திற்கிடமான நபர்கள், கடந்த கால அல்லது நிகழ்காலத்தை நாடாளுமன்றத்தில் இருந்து தடை செய்ய வேண்டும்

அவர்களால் ஏற்படும் நிதி இழப்புகள், அலுவலகத்தில் உள்ள அரசியல்வாதிகள் காரணமாக அவர்களிடமிருந்தும் மீட்கப்பட வேண்டும், அவர்களின் வேட்பாளர்கள், சொத்துக்கள் - எம்.பி.க்களும் பொதுவான குடிமக்களுக்கு பொருந்தும் அதே விதிகளை பின்பற்ற வேண்டும்.

குடிமக்களுக்கு எல்பிஜி எரிவாயு மானியத்திற்கு விலக்கு இல்லை. ஆனால், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் எம்எல்ஏக்களுக்கு கிடைக்கும் மானியங்கள் மற்றும் பாராளுமன்ற கேண்டீனில் மானிய உணவு உள்ளிட்ட பிற மானியங்கள் திரும்பப் பெறப்பட வேண்டும்

பாராளுமன்றத்தில் பணியாற்றுவது ஒரு மரியாதை,: கொள்ளையடிக்கும் இலாபகரமான வாழ்க்கை அல்ல.

இலவச ரயில் மற்றும் விமானப் பயணங்கள் நிறுத்தப்பட வேண்டும். சாமானியர்கள் அவர்களுடைய வீண் செலவுகளையும் ஆடம்பரத்தையும் ஏன் தாங்க வேண்டும்?

**(Shared in National and Common men's welfare interest, by Dr. K. B. Elango, Salem. https://www.facebook.com/100002669372058/posts/2373980772700879/?sfnsn=scwspmo)**

## மனித நேயம் இல்லா தேசம்..... இனி நாசம் தான்....

- லஞ்சம் ஊழல் கொள்ளை இல்லா தேசம் கிடைக்கா வரம்...
- உயிரை ஊறுகாய் போல் காசால் ருசி பார்க்கும் மருத்துவமனை....
- திட்டங்கள் போர்வையில் கோடிகளை பதுக்கும் அரசியல்.....
- கொலைகாரனுக்கும் கொள்ளைகாரனுக்கும் சலாம் போடும் குல்லா கழட்டும் காவல் துறை..
- வாங்கிய சில்லரைக்கு நிரபராதியை காவு கொடுக்கும் காவல் நிலையம்..
- நீதி தேவதை பாரபட்சமில்லாமல் நீதி வழங்க கட்டப்பட்ட கண்கள்..
- தவறான நீதி வழங்கும் அவல நிலையை காண பொறுக்காமல் மூடிய நிலையில். பேரம் பேசி சட்டத்தின் ஓட்டைகளில், நிதியிடம் மண்டியிட்டு கிடக்கிறது.
- குமாஸ்தா முதல் அதிகாரி வரை கையில் மொய் வைத்தால் அவர் கைநாட்டும் கையெழுத்தாகும்..
- வீடு கட்ட அங்கீகாரம் வாங்க குறிப்பிட்ட தொகை என்றால் கையூட்டிற்கு இரட்டிப்பு தொகை....
- கட்டிய வீட்டிற்கு வரி போட பில் கலெக்டருக்கு நாம் கட்ட வேண்டும் வரி...
- சாதி சான்றிதழ், இருப்பிட சான்றிதழ், ரேஷன் கார்டு..வாங்க மறைக்கப்பட்ட ஊழல் கட்டணங்கள்...
- .இப்படி அரசாங்கம் போடாத வரிகளுக்கும் போடும் வரியை என்ன சொல்ல!
- இந்த வேலை செய்தால் இவ்வளவு பிச்சை போடலாம் என்ற தெளிவு புரிதல் எல்லோருக்கும் கிடைத்தால்.. இதிலும் குறைத்து கொடுக்கவில்லை அல்லது கூடுதலாக கொடுக்கவில்லை என்ற சகஜ நிலை உருவாகுமே...
- இப்படி கொள்ளை அடித்த பணத்தில் தம் மனைவி மக்களுக்கு வாங்கி கொடுக்கும் பொருள்களில் கொடுத்தவரின் முகமும் சாபமும் தெரியப் போவதில்லை....
- தெரிந்தால் தான் வாங்கும் கையூட்டு விபச்சாரமாகவே தெரியும்.....
- சினிமாவில் மட்டும் ஹீரோக்கள் தட்டி கேட்கிறார்கள்....
- நிஜத்தில் இடைத்தரகர்கள் கூட்டி கொடுக்கிறார்கள்...
- முன்பேல்லாம் உழைத்து சாம்பாதித்தார்கள்; இன்று ஒரு நாளில் முடிந்தளவு உருவி சாம்பாதிக்கிறார்கள்...
- இதில் அவன் இவன் என்ற பாகுபாடு இல்லை.. தொழில் தர்மம் இல்லா சுயநல வாதிகள்...
- இன்று மட்டும் இன்று கிடைக்கும் வருமானதில் எத்தனை பேர்களின் உணர்வுகளை கொன்று குவித்திருக்கிறார்கள்..

**மனித நேயம் இல்லா தேசம்..... இனி நாசம் தான்....**

## *இன்றைய சிந்தனை..*

### *" நேர்மை ஒரு அரிதான பொக்கிஷம்...."*

இன்று எங்கு பார்த்தாலும் போலிகள், ஊழல்கள், மோசடிகள், எதிலும் பொய் மற்றும் நேர்மை இல்லாத தன்மைப் பெருகி விட்டது..

அமெரிக்காவின் எழுத்தாளர் மேரிலேன்ட் மாகாணத்து ஆளுநருமான ஹிர்ஷ் கோல்ட்பெர்க் “The book of Lies” என்ற புத்தகம் எழுத, இவர் செய்த ஆய்வு இவரை இதற்குத் தூண்டியது.

இந்தப் புத்தகம் எழுத இவர் சுமார் நான்கு வருடங்கள் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வில் ஒரு நாளைக்கு சுமார் 200 முறை மனிதர்கள் சாதாரணமாக பொய்களை உதிர்க்கிறார்கள் என்று கண்டு அறிந்தார்..

இந்த நிலை நீடித்தால் பொய் என்பது வாழ்வியல் முறை என்றாகி விடும். நேர்மை என்ற ஒரு கோட்பாடு அழிந்து விடும் என்று அவர் கருதினார்.

நேர்மை என்ற கோட்பாடு பாதுகாக்கப்பட வேண்டுமானால், வருடத்தில் ஒரு நாளாவது நேர்மையை நினைவு கூறுவது அவசியம் என்று அவர் கருதினார்.

இதனால் முட்டாள்கள் தினம் அனுசரிக்கப்படும் ஏப்ரல் மாதத்தின் கடைசி நாள் நேர்மை தினமாக அனுசரிக்கப்பட வேண்டும் என விரும்பினார். இந்த நாளை அனுசரிக்கப் பல ஆலோசனைகளும் கோல்ட்பெர்க் தருகிறார்.

உலகின் மிக மோசமான ஊழல்கள் பற்றி மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவது, நேர்மை பற்றி உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர்கள் என்ன கூறினார்கள் என்று அவரவர் வீட்டில், தெருவில், அலுவலகத்தில் பகிர்ந்து கொள்வது,

இன்று ஒரு நாள் எக்காரணம் கொண்டும் பொய் பேசாமல், நேர்மையாக இருப்பேன் என்று தனக்குத் தானே உறுதிமொழி எடுத்துக் கொள்வது என்று நீண்டு கொண்டே போகிறது அந்தப் பட்டியல். அதே நேரம் நேர்மைப் பற்றி உலகப் பெருந்தகை தன்னுடைய திருக்குறளில் அய்யன் வள்ளுவர் என்ன சொல்கிறார் என்றால்.,

"கேடும் பெருக்கமும் இல் அல்ல; நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க்கு அணி".,

இதன் கருத்து என்னவென்றால்..,பொருட்செல்வத்தைக் காட்டிலும், நேர்மை தான் சான்றோரின் விலை உயர்ந்த அணிகலன் என்பது. இன்னொரு குறளில்.. "வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும தீமை இலாத சொலல்."

மற்றவரை வருத்தப்படுதாத எந்தச் சொல்லும் வாய்மையாகக் கருதப்படும்.

*நாம் சொல்லும் சொல் , நாம் பயணிக்கும் பாதை நேர்மையாக இருந்தால் வெற்றிகள் நம்மைத் தேடி வரும்...*

*வாழ்க்கையில் நேர்மையாக இருக்க முயல்வதும் ஒரு போராட்டம் தான்*

***உண்மையும் நேர்மையும் நம்மைப் பாதுகாக்கும், நேர்மை ஒரு போதும் வீண் போகாது.***
***நேர்மையை விதையுங்கள்..,***

**பதவியும் பணமும் உங்களை நாடி தேடி வரும்...***

# ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை

## *20 வது பொது குழுக்கூட்டம் (10.07.2022)*

நமது இயக்கத்தின் 20-வது பொதுகுழுக் கூட்டம் 10.07.1922 கடவுள் வாழ்த்துடன் தொடங்கியது பொதுகுழு கூட்டத்திற்கு 26 உறுப்பினர்களும் 4 பார்வையாளர்களும் கலந்துக் கொண்டனர். பொது செயலர் வரவேற்புரை வழங்கினார். அடுத்து தலைவர் உரை ஆரம்பமானது. தலைவர் ,தமது உரை துவங்கும் முன்பே, இப்பொதுக்குழுவுக்கு உரிய கோரம், அதாவது 50 உறுப்பினர்கள் வராததால், தேர்தல் முடிவுகள் தவிர வேறு எந்த முடிவும் எடுக்க இயலாது. பொதுவாக விவாதிக்கலாம் என்று தெரிவித்து அடுத்த பொதுகுழு தேதி பின்னர் நேர்மைநெறியில் அறிவிக்கப்படும் என்று தெரிவித்து, தமது உரையில் தெரிவித்தார். தலைவர் உரையில் ஆ.என்.ஐ.ன் (RNI) ஒப்புதல் பற்றி உரையாற்றினார். அமைச்சர் செந்தில் பாலாஜி மீது ஊழல் வழக்கு பற்றி உரையாற்றினார். நமது நாட்டின் ஊழல்கள் அதிகமாவதால் தற்போது இலங்கையில் உள்ள பொருளாதார நெருக்கடி நமது நாட்டுக்கும் ஏற்படும் என்று கூறினார். வாழ்க்கை மேம்பாடுகளை (WELFARE) பற்றி எதுவும் செய்ய வேண்டியதில்லை. நமது குறிக்கோள் ஊழலை ஒழிப்பது மட்டுமே என்று வேண்டுக்கோள் விடுத்தார்.

பொது செயலர் திரு.வே. கார்த்திகைராஜன் 2021-2022 க்கான ஆண்டறிக்கையை அறிவித்தார் .இரண்டு ஆண்டுகளாகக் கொரனாவால் பொதுகுழுகூட்டம் நடைபெறாததற்கு வருத்தம் தெரிவித்தார். நிதி செயலர் திரு.தனசேகரன் அவர்கள் 2021-2022 ம் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட ஆண்டறிக்கையை விவரித்து பேசினார். பின்பு, தற்போது பொதுகுழு முழு கோரம் (CORAM) இல்லாததால் , கோரிக்கைகள்/ தீர்மானங்கள் அடுத்த தள்ளி வைக்கப்பட்ட பொதுகுழுவில் மீண்டும் வைக்கப்படும் என்று தலைவர் தெரிவித்தார்.

2022-2025க் கான செயற்குழு உறுப்பினர்கள் தேர்தலில் கீழ்கண்ட ஏழு பேரும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டதாகத் தேர்தல் குழு அதிகாரி திரு.ப.முத்துசாமி அறிவித்தார்.

1. **தலைவர் : ந. சுப்ரமணியன்**
2. **உ.தலைவர்: :. அய்யப்பன்,**
3. **பொதுசெயலர் : வே. கார்த்திகைராஜன்**
4. **நிதிசெயலர் : அ. தனசேகரன்,**
5. **வெளியீடு : கோவிந்தசாமி,**
6. **தலைமையகம் ,: ஜெ.மனோகர்,**
7. **கலைதொடர்ப்பு : சாந்தகுமார்**

மீதம் உள்ள நான்கு பதவிககளுக்கு விண்னப்பம் ஏதும் வராததால் அவை காலியாக உள்ளன.

அடுத்துப் பேசிய திருச்சி மாவட்டத் தலைவர் திரு.எம்.சுதாகர் ஏசுவடியான் அவர்கள் சொந்த வாழ்க்கையில் அவர் அரசு பணியாற்றியபோது நடைபெற்ற ஊழல் எதிர்ப்பு சாதனைகள் மற்றும் அனுபவங்களைக் கூறினார். நமது இயக்கத்தின் வலைதளத்தில் உள்ள குறைகளை சரிசெய்யுமாறு வேண்டிக்கொண்டார் .நேர்மை மன்றம் என்று ஒன்றை ஏற்படுத்தி அதில் இளைஞர்களையும், மாணவர்களையும் இணைத்து நீதி, நேர்மையைக் காப்பபாற்றுவதற்குப் பயிற்சி அளிக்குமாறு யோசனை கூறினார்.

அடுத்துப் பேசிய திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு.எம்.வி. சீனிவாசன் அவர்கள் தமிழ் நாட்டில் இருக்கும் ஊழலை பற்றி பேசினார். அரசுத் துறை வேலைகளில் 40/- விழுக்காடு இலஞ்சமாகத் தர வேண்டி இருப்பதற்கு வருத்தம் தெரிவித்தார் மேல்மட்டத்தில் இருந்து கீழ்மட்டம் வரை இலஞ்சம் கொடுத்தால் தான் காரியம் சாதிக்க முடிகிறது என்று வேதனைப்படார். நமது இயக்கத்திலுள்ள அனைவரும் தமிழ்நாடு முதலமைச்சரை நேரடியாக சந்தித்து இலஞ்சத்தை பற்றிக் கூறி அதனைத் தடுக்க வழிவகை செய்ய வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார்.

அடுத்ததாகப் பேசிய தஞ்சை மாவட்ட திரு.குணசேகரன் அவர்கள், அரசு பள்ளி கல்வித்துறை தலைமை ஆசிரியர் பதவியிலிருந்து ஒய்வு பெற்றவர். அவர் உரையாற்றும் போது தன்னுடைய பணிகாலத்தில் நேர்மையாக இருந்ததால் ஏற்பட்ட துன்பங்களைப் பற்றி விவரித்தார். பள்ளி கல்வி துறைகளில், அவர் பணிபுரிந்த இடங்களிலும் நடந்த ஊழலை எதிர்த்து துணிவாக எதிர்த்து புகார் கொடுத்தும் எஃப்.ஐ.ஆர். பதிவுகளுக்கு பதில் வேண்டும் என்று போராடினார். இடைமறித்த தலைவர், அந்த தகவல்களைத் அளிக்குமாறும் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கலாம் என்று தெரிவித்தார். அவரும் அனுப்புவதாக தெரிவித்தார். ஊழலைக் குறைக்க. சில தகவல்களின் படி பொது நல வழக்கு தொடங்க வேண்டும் என்று உரைத்தார். நமது இயக்கத் தலைவர் பொதுநல வழக்கு தொடர அவரிடம் ஆவணங்களை வழங்குமாறு கேட்டுக்கொண்டார். நமது இயக்கம் மூலம் பொதுநல வழக்கு தொடங்கலாம் என்று அறிவித்தார்.

அடுத்துப் பேசிய மாவட்ட செயலர் திரு.எம்.கலியபெருமாள் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஆறுகளில் வண்டல் மண் திருடு போவது பற்றி உரையாற்றினார். இந்த நாட்டில் ஊழல் இல்லாமல் எதுவும் நடக்காது என்று கூறினார்.

அடுத்ததாக திருச்சி மாவட்ட செயலர் திரு.எ.பன்னீர்செல்வம் அவர்கள் உரையாற்றினார். அவர் தஞ்சை மாவட்டத்தில் உள்ள வருவாய் துறை அலுவலகங்களில் நடைபெறும் ஊழலை பற்றி அலசி ஆராய்ந்து விவரித்தார்.

அடுத்தபடியாக, நம் இயக்க உறுப்பினர்கள் அனைவரும், தலைவர் தலைமையில் ஊழல் எதிர்ப்பு உறுதிமொழியை வாசித்து உறுதி ஏற்று கொண்டனர். நமது இயக்க நிதிசெயலர் திரு.எ.தனசேகரன் அவர்கள் கூட்டத்திற்கு வருகை புரிந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். முடிவில், நாட்டுபண்ணுடன் இந்த வருட பொதுகுழுக்கூட்டம் இனிதே முடிவுற்றது.

பொதுசெயலர்

**நேர்மை நெறியில் குறைந்த செலவில் விளம்பரம் செய்து பயன் பெருவீர்!**
**விளம்பரக்கட்டண விவரம்**
**முழுப்பக்கம் ரூ 2000/-; அரைப்பக்கம் ரூ 1000/-; கால் பக்கம் ரூ 500/-.**
**இதழில் வருகின்ற கட்டுரைகள், விளம்பரங்கள் படைப்பாளியையே சார்ந்தது**
**நேர்மை நெறி நிர்வாகிகளோ , ஆசிரியரோ பொறுப்பல்ல**

# பன்றிமயக் கோட்பாடு !!!.

***GPF கேட்டு போராடியவனுக்கு அகவிலைப்படியும் மறுக்கப் பட்டது !!!.***

ஒரு அநியாயக்கார அரசன் ஒருவன் ஒரு அப்பாவிக் குடிமகனைக் கைது செய்து மூன்று மீட்டர் மாத்திரமே பரப்பளவான ஒரு தனிச் சிறையில் அடைக்கும்படி கட்டளையிட்டான். !!!. நிரபராதியான அந்த குடிமகன் ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பித்தான் !!!. "நான் நிரபராதி, ஏன் என்னைக் கைது செய்தீர்கள் ?. ஏன் என்னைச் சிறையில் அடைத்தீர்கள் ?" என்று உரக்கக் கதறினான் !!!.

பின்னர் அவனை ஒரு மீட்டர் மாத்திரமே விசாலமான ஒரு தனிச் சிறையில் அடைக்கும் படி கட்டளை வந்தது !!!. மீண்டும் ஆர்ப்பாட்டம் செய்தான் !!!. ஆனால் இம்முறை "நான் நிரபராதி" என்ற வாதத்தை மறந்து விட்டான் !!!. "இது என்ன கொடுமை !!!. இந்தச் சிறையில் எப்படி இருப்பது !!!. உறங்குவது !!!. அமர்ந்து கொண்டு தானே உறங்க முடியும் !!!. இது உங்களுக்கே தப்பாகத் தெரியவில்லையா ?" எனக் கதறினான் !!!.

சினம் கொண்ட காவலர் இன்னும் நான்கு சிறைக் கைதிகளை அவனோடு சேர்த்து அந்தச் சிறிய கூட்டில் அடைத்து விட்டான் !!!. இப்போது ஐந்து பேரும் இணைந்து கூக்குரலிட்டனர் !!!. "எங்களால் முடியாது !!!. நாங்கள் மூச்சுத் திணறி செத்து விடுவோம் !!!. உங்களுக்கு ஈவிரக்கம் எதுவும் இல்லையா ?" என புலம்பினார்கள் !!!.

மேலும் சினம் கொண்ட காவலர் ஒரு "பன்றியை" அவர்களோடு சிறையில் அடைத்து விட்டான் !!!. விரக்தியடைந்த அவர்கள், "நாங்கள் இந்த அசிங்கத்தோடு இந்தச் சிறிய கூட்டில் எப்படி இருப்பது !!!. தயவு செய்து இந்த பன்றியை மாத்திரமாவது வெளியே எடுத்து விடுங்கள்" எனக் கெஞ்சிக் கேட்டனர் !!!.

தயவு காட்டிய காவலர் "பன்றியை" வெளியே எடுத்தான் !!!. அடுத்த நாள் அரசன் அந்தப் பக்கமாக வந்து "இப்போது உங்கள் நிலை எப்படி ?" என்று விசாரித்தான் !!!.

"நாங்கள் நல்ல சுகமாக இருக்கிறோம் !!!. எங்கள் பெரிய பிரச்சினை தீர்ந்து விட்டது" என்று பதில் கூறினார்கள் !!!.

இப்படித் தான் எமது நாடுகளில் "பன்றிமயக் கோட்பாடு" அமல் படுத்தப் படுகிறது !!!. "பன்றியை மாத்திரம் எடுத்து விட்டால் போதும்" என்ற கோரிக்கையில் ஆர்ப்பாட்டம் முடிந்து விடுகிறது !!!. அதற்கு முன்னால் இருந்த விவகாரம், அதற்கும் முன்னால் இருந்த மூல விவகாரம் எல்லாம் மறக்கடிக்கப் படுகிறது !!!.

புதுப்புது பிரச்சினைகளைக் கட்டவிழ்த்து விடுகின்றனர் !!!. முடிவில் பன்றி மய கோட்பாட்டை அவிழ்த்து விடுகின்றனர் !!!. பின்னர் நாம் அதிலிருந்து விடுபட வேண்டும் என்பதற்காக முதன்மைப் பிரச்சினைகளை நாமே மறந்து விடுகின்றோம் !!!.

**மறக்க வைக்கப் படுகிறோம்!!!. இது மறுக்க முடியாத யதார்த்தம் !!!.**

**"பட்டு வேட்டி (பழைய ஓய்வூதிய திட்டம்) கனவில் இருந்தவனிடமிருந்து,**

**கட்டியிருந்த கோவணமும் (சரண்விடுப்பு, அகவிலைப்படிஉயர்வு) உருவப் பட்டது !!!."**

## முகநூலில் பகிர்ந்த பதிவு

தானுண்டு தன் வேலையுண்டு என்று துருப்பிடித்த வாழ்க்கையை வாழ்பவர்கள் தீயவர்களே_*

"தங்கமான மனுசன் அவர். தானுண்டு தன் வேலையுண்டுன்னு இருப்பார். யார் விசயத்துலயும் தலையிட மாட்டார். எந்தத் தப்பு தண்டாலயும் தலையக் குடுக்க மாட்டார்"- என்பது நல்லவருக்கான இலக்கணமாய் புரிந்து வைத்திருக்கிறோம்.

மாறாக, நீடித்திருக்கும் ஏதேனும் வழக்கத்தைக் கேள்வி கேட்பவர்களை கண்டால் நமக்கு பிடிப்பதில்லை. தன் வேலையைத் தாண்டி பொது விசயங்களில் தலையிடுபவரை அடாவடி என்றும் அராத்து என்றும் வெறுக்கத் தொடங்குகிறோம். அடுத்தவர் சிக்கலுக்கோ, பொதுச் சிக்கலுக்கோ நம்மிடம் கேள்வி கேட்பவர்களைப் பார்த்தால் முதலில் என்ன சிக்கல் என்பதைத் தாண்டி "இதில் உன்னோட பிரச்சனை என்ன? நீ யார் கேட்பதற்கு?" என்பதே முக்கிய கேள்விகளாக நம் நாவில் முன்னுக்கு வந்து நிற்கின்றன.

உண்மையில் தானுண்டு தன் வேலையுண்டு என்றிருப்பவர்களே தீயவர்கள். ஆகப் பெரிய சுய நலவாதிகள். சமூகத்தில் பிறந்து, சமூகத்தால் ஆளாகியிருக்கும் இவர்கள் சமூகத்துக்கு எந்தப் பிரதிபலனும் கொடுக்க முன்வராத நன்றி கெட்டவர்கள்.

ஆதிக்கப் பிரிவினரிடம் நல்ல பெயர் எடுத்துக் கொண்டு தனக்கான சுய நலக் காரியத்தை மட்டும் சத்தமின்றி சாதித்துக் கொள்பவர்கள். ஒருபோதும் தன் உழைப்பை, நேரத்தை, பணத்தை, அறிவை எளியவர்களின் துயர் துடைக்கப் பயன்படுத்தாத அவமானச் சின்னங்கள். சமத்துவம் இல்லாத வாழ்வியல் சூழலில் எந்தத் தருணத்திலும் இவர்கள் பாதிக்கப்படுபவர்களுக்குக் குரல் கொடுக்க முன்வருவதில்லை. அடக்குமுறையாளர்களை எதிர்த்துப் போராட முன் வருவதில்லை

எது அறம் என்பதை விட நாலு பேர் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்ற போலி அந்தஸ்துதான் இவர்களுக்கு முக்கியமாகி விடுகிறது. இதிலிருந்தே இவர்களுடையே கொடூர கல் மனதைக் கண்டுபிடித்துவிட முடியும்.

இதற்கு எதிர் மாறானவர்கள் நம் பார்வையிலான அடாவடிகளும், அராத்துகளும். நாம் நினைப்பது போல் தீயவர்கள் அல்ல அவர்கள். உண்மையில் அவர்கள் பேரன்பின் வடிவானவர்கள். அவர்களால் கண் முன் ஒரு சாராருக்கு நடக்கும் அநீதியைப் பொறுத்துக் கொள்ள முடிவதில்லை. எனவேதான் தனது உழைப்பை, நேரத்தை, பணத்தை, அறிவைச் செலவழித்துப் பாதிக்கப் படுபவர்களுக்காகக் குரல் கொடுக்கிறார்கள்.

நாலு பேர் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்பதையும் தாண்டி தன் பெயர் கெட்டாலும் பரவாயில்லை, அறத்தோடு நிற்பதே முக்கியம் என்பது இவர்கள் நிலைப்பாடாய் இருக்கிறது.எனவே நல்லவர் குறித்தும், தீயவர் குறித்தும் நமக்கான புரிதல்களை நாம் மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

இனியொருமுறை தானுண்டு தன் வேலையுண்டு என்று இருப்பவர்களை நல்லவர்கள் என்று சொல்லாதீர்கள். முடிந்தால் அப்படி இருப்பது எத்தனை "பெரிய அயோக்கியத்தனம்" என்பதை அவர்களுக்குத் தன்மையாக விளக்குங்கள். இனி எங்கேனும் யாரேனும் அடுத்தவர்களுக்காகக் குரல் உயர்த்திப் பேசுவதைப் பார்த்தால் அவரை அராத்து என்று நினைக்காதீர்கள். அந்தச் செயல் உங்களையும், என்னையும் போல் அல்லாமல், ஒரு கனிந்த இதயத்தின் வெளிப்பாடு என்பதை அடையாளம் காணுங்கள்.

நீங்கள் பயணம் செல்லும் வழியில் யாரேனும் பொதுக்காரியம் எதற்கேனும் தெருவோரம் நின்று போராடிக்கொண்டிருந்தால், அவர்களை ரௌடிகளாக,

வன்முறையாளர்களாக நினைக்காதீர்கள். அவர்களே இவ்வுலகின் ஆகச் சிறந்த பேரன்புக்காரர்கள் என்று அடையாளம் காணுங்கள்.

**நான் எதற்கும் உதவாத "தான்" , "தன் குடும்பம்", "தன் வாழ்க்கை" என்னும் துருப்பிடித்த வாழ்கையை வாழ விரும்புவதில்லை.**

------------------------------------------------------------------------------------------------------------------------------------

சட்டத்தை முறையாக அமல்படுத்தினால்???

# தமிழகத்தில் ஆக்கிரமிப்பு என்பதே இருக்காது

## சென்னை உயர் நீதிமன்றம் கருத்து

சென்னை, ஜூலை 12: சட்டத்தை முறையாக அமல்படுத்தினால் தமிழகத்தில் ஆக்கிரமிப்புகளே இருக்காது என்று சென்னை உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆனந்தன் என்பவர் தாக்கல் செய்துள்ள மனுவில், பொன்னேரி வட்டத்தில் ஆரணியாற்றில் தனியார் நிறுவனங்கள் ஆக்கிரமித்து வணிக வளாகங்களையும், வீடுகளையும் கட்டியுள்ளனர். இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றக்கோரிய புகார் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது.

இந்த வழக்கு தலைமை நீதிபதி முனீஸ்வர்நாத்பண்டாரி, நீதிபதி என்.மாலா அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, கூடுதல் அட்வகேட் ஜெனரல் ஜெ.ரவீந்திரன் ஆஜராகி, ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நீர்நிலை ஆக்கிரமிப்புகள் தொடர்ந்து கண்டறியப்பட்டு வருகிறது என்றார்.

வழக்கை விசாரித்த நீதிபதிகள், ஆக்கிரமிப்புகள் என்று தெரிந்தும் அப்புறப்படுத்துவதில் என்ன சிரமம் உள்ளது. ஒவ்வொரு ஆக்கிரமிப்பையும் நீதிமன்றம் உத்தரவுக்கு பின்பு தான் அகற்றுவீர்களா. நடவடிக்கை எடுக்கிறோம் என்று கூறி அதிகாரிகள் தங்களை நியாயப்படுத்திக் கொள்ள வேண்டாம். சட்டத்தை முறையாக அமல்படுத்தினால் தமிழகத்தில் ஆக்கிரமிப்புகள் என்பதே இருக்காது.

புகார் அளித்தவரும் இறந்து விடுவார், அதிகாரிகளும் மறந்து விடுவார்கள், ஆனால் ஆக்கிரமிப்புகள் மட்டும் தொடரும். அரசின் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து பதிலளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டு விசாரணையை ஆகஸ்ட் 2ம் தேதிக்கு தள்ளிவைத்தனர்.

## Govt appoints new chiefs of Niti Aayog, IB

Former Drinking Water and Sanitation Secretary Parameswaran Iyer, who spearheaded the Swachh Bharat Mission, was on Friday appointed as the CEO of Niti Aayog, according to a government order. He will replace Amitabh Kant, who will demit office on June 30.

Meanwhile, senior IPS officer Tapan Kumar Deka was appointed Intelligence Bureau (IB) chief, replacing Arvind Kumar whose extended tenure ends on June 30. Deka, who has been handling the operations wing of the IB, takes over as the new chief for two years. P 17, 21

## DVAC casts corruption net wide; govt delays nod to prosecute officials

Komal.Gautham
@timesgroup.com

**Chennai:** The vigilance probe against former AIADMK minister S P Velumani just got bigger with the Directorate of Vigilance and Anti-Corruption (DVAC) naming at least a dozen officers, including four IAS officers who had served in Chennai and Coimbatore corporations, and seeking sanction from Tamil Nadu government to investigate them. There is more than sufficient material to proceed against these officials, the DVAC said. Interestingly, though this letter dated November 2021 has surfaced now, the government has not given its nod to prosecute the officers, so far.

> During the investigation, the examination of certain witnesses under section 161 CrPC and 164 CrPC, revealed the role of public servants mentioned above in criminal conspiracy which resulted in huge loss to the exchequer. It is proposed to include these suspected officers as additional accused in the case
> — DVAC

In his letter to the government, the DVAC director had mentioned that the officers' role is in the case based on other suspects' statements to DVAC under Section 161 of CrPC as well as to courts under Section 164 of CrPC.

Among the officers in the dock are former Chennai commissioner G Prakash and former Coimbatore commissioner K Vijayakarthikeyan. The other IAS officers named in the letter (a copy of which is with TOI) are former deputy commissioners of GCC, Kandasamy and Madhusudhan Reddy.

▶ Public servants' role, P 6


An arrest on Nepal border helps police bust illegal club

Udaipur's 'bird village' to be decla

The two lakes, Brahma and Dhandh, play host to a large number of mig


ஊழல் ஒழிப்புக் கட்டணம்

- துர்வாசர்

இலஞ்சம் தவிர்! Date of Publication: 5th of Every Month நெஞ்சம் நிமிர்!!

# நேர்மை நெறி- ஆகஸ்டு 2022


| | |
|---|---|
| Registered with the Registrar of News Papers for India,New Delhi, Regn.No.TNBIL/2003/10419 | SSB/Chennai City North Divn Regn.No.TN/CCn/671/2018-20 |

PERMITTED TO POST WITHOUT PREPAYMENT VIDE WPP NO. TN/PMG(CCR)WPP533/2018-20





We should not waste money to buy voters... it's easier to buy MLAs!

# நேர்மை நெறி

ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின்
திங்களிதழ்

ஆசிரியர் : வே. கார்த்திகை ராஜன்

வெளியீட்டுச்செயலாளர் : ஜி கோவிந்தசாமி:


Permitted to Posting 7th to 13th
Posted at Patrika Channel
(Egmore RMS/1) on 13 Aug 2022
Due to corona published online)


.புல்லிலை எருக்கம் ஆயினும், உடையவை கடவுள் பேணேம் என்னா

பெறுநர்

IF UNDELIVERED, PLEASE RETURN TO

**ACM, 155, KONNUR HIGH ROAD,**
AYANAVARAM, CHENNAI-23


Owned by Anti Corruption Movement, Chennai and published through online on its behalf of Govindasamy (9841026766) from No.155, "Nambakam" Konnur High Road, Ayanavaram, and Chennai-600 023 and printed by Thiru G Parthasarathy at VPS PRINTERS, No 292, TH Road, Chennai-600005 Editor: V.Karthikai Rajan


இலஞ்சம் கொடுக்காதீர்! இலஞ்சம் கொடுக்க விடாதீர்!!